# திலீபனின் நினைவேந்தலுக்கு தடை கோரும் மனு நிராகரிப்பு

## யாழ். நீதிமன்றம் மீண்டும் அதிரடி

தமிழ் மக்களின் விடுதலைக்காக உண்ணாநோன்பிருந்து வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்க முடியாது என இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இன்று கட்டளை பிறப்பித்தது.

திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்ய வேண்டுமென யாழ்ப்பாணப் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை (19) மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவைத் தள்ளுபடி செய்து மறுநாள் புதன்கிழமை (20) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், பொலிஸ் திணைக்களத்தின் சட்டம், ஒழுங்குப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று, நேற்று கொழும்பிலிருந்து ஹெலியில் வந்து, யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அவசர மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

2 ▶




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 03 புதன்கிழமை 20.09.2023 கதிர் 76









## சிவாஜிலிங்கத்துக்கு கொழும்பு நீதிமன்று பிணை வழங்கியது

2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்தமை அல்லது பங்குபற்றியமை தொடர்பாக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்திற்கு, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

எம்.கே. சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் இன்று

2 ▶

## அமெரிக்கா பாடம் கற்றுக்கொண்டது நம் தலைவர்கள் இன்னும் கற்கவில்லை

### *சஜித் பிரேமதாச மன்றில் தெரிவிப்பு*

யார் மீதும் சேறு பூசும் தேவைப்பாடு எங்களுக்கு இல்லை, உண்மையை உலகுக்கு வெளிப்படுத்தும் தேவைப்பாடே எமக்குள்ளது, என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகவும், அது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் மற்றும் அதனால் பாதிக்கப்பட்ட சமூகம் சார்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரேரணையாக இந்த விவாதம் முன்வைக்கப்பட்டது.

இது, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவருக்கும் சேறு பூசவோ அவமதிக்கவோ அல்லவெனவும், இதன் முக்கிய நோக்கமும் குறிக்கோளும், உண்மை என்ன என்பதைப் புரிந்துகொள்வதாகும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அமைய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் தற்போதைய தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தின் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தில் இன்று இடம்பெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனல் 4 இல் வெளியான காணொளி ஒன்றினால்தான் இது பேசுபொருளாகியதாக ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் கூறினாலும்? அவ்வாறு சொல்பவர்கள் இது சம்பந்தமாக எந்த

2 ▶

## கிளிநொச்சியில் திடீர் சோதனை



கிளிநொச்சி மாவட்ட அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் இன்று வியாழக்கிழமை கிளிநொச்சி சந்தைப்பகுதியில் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

சந்தைப்பகுதியிலுள்ள பலசரக்குக்

2 ▶



## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. சந்திப்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்புக் குறித்து இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

இதன்போது சுமந்திரனின் சமீபத்திய அமெரிக்கப் பயணம்,

2 ▶

## வவுனியா இரட்டைக்கொலையுடன் தொடர்பு ஒருவர் அடையாளம் - மூவருக்குப் பிடியாணை

வவுனியா இரட்டைக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, மூவருக்குப் பகிரங்கப் பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா - தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23 ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து தாக்குதல் நடத்தி, பெட்ரோல் ஊற்றி எரியூட்டப்பட்ட சம்பவத்தில் இருவர் உயிரிழந்தனர். இக்கொலைகள் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர்

2 ▶

## திலீபன் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடை கோரிய பருத்தித்துறை பொலிஸாரின் மனுவும் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், செப். 22

தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்யக் கோரி பருத்தித்துறை பொலிஸார் தாக்கல் செய்த மனுவை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் இன்று நிராகரித்தது.

தியாகி திலீபனின் நினைவாக நிகழ்வுகள், ஊர்திப் பவனிகளை நடத்துவதன் மூலம் வன்முறைகள் உருவாகும் சூழல் நிலவுகின்றது எனக் குறிப்பிட்டு பருத்தித்துறை பொலிஸார் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

வன்முறையில் யாராவது ஈடுபட்டால் அவர்களைக் கைதுசெய்யப் பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு, என்று சுட்டிக்காட்டிய நீதிவான், அமைதியான நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்க முடியாது என்று உத்தரவிட்டார். (அ)

# திருகோணமலையில் 27ஆம் திகதி மாபெரும் களியாட்ட நிகழ்வுகள்



கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் உலக சுற்றுலா தினத்தினை முன்னிட்டு மாபெரும் களியாட்ட நிகழ்வுகள் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் இம்மாதம் 27ஆம் திகதியில் இருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வரை திருகோணமலை டச் பே கடற்கரையில் களியாட்ட நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் செய்தியாளர்களுக்குத் தெளிவூட்டும் வகையிலான சந்திப்பு இன்று கிழக்கு மாகாண சுற்றுலாப்பணியகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கிழக்கு மாகாண சுற்றுலாப்பணியகத்தின் பணிப்பாளர் மதனவாசன், குறித்த தினங்களில் கால்பந்து, கபடிப் போட்டிகள், மரதன் ஓட்டப்போட்டி, சிறுவர் இல்லங்களில் வாழும் சிறார்களுக்கான விசேட போட்டிகள், பட்டத்திருவிழா, உணவுத் திருவிழா, இசைக்கச்சேரிகள் போன்ற களியாட்ட நிகழ்வுகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளோம். எனவே, இந்நிகழ்வுகளில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்று கிழக்கு மாகாண சுற்றுலாத் துறையினை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்பை வழங்கவேண்டும், எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் என்.எம்.நௌபீஸ் சுற்றுலாப்பணியகத்தின் முகாமையாளர் நாயகம் ஞானசேகரம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (04)

## அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மற்றும் வடக்கில் பாரிய புதைகுழிகள் கண்டறியப்பட்டமை குறித்துப் பேசியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோதல்களின் முடிவில் நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை நினைவுகூர்ந்த அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்,

சமாதானத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப வேண்டியதன் முக்கியத்துவத்தையும், நிலையான சமாதானத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் வலியுறுத்தியதாகத் தெரிவித்துள்ளார். (04)

## வவுனியா இரட்டைக்கொலையுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்த நிலையில், மூன்று சந்தேகநபர்களுக்கு எதிரான சாட்சியங்கள் உறுதிப்படுத்தப்பட்டமையினால், அவர்களைக் கைது செய்ய குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். குறித்த மூவரும் தலைமறைவாகியுள்ளதால், அவர்களைக் கைது செய்வதற்கான பகிரங்கப் பிடியாணை உத்தரவை வவுனியா நீதிமன்றம் பிறப்பித்துள்ளதோடு, வழக்கை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது. (04)

## கிளிநொச்சியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள், மரக்கறிச் சந்தைகள், பழக்கடைகள், தேங்காய் விற்பனை இடங்கள், நகைக்கடை போன்ற இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, அரச அனுமதியற்ற தராசுகள் குறித்த திணைக்களத்தினரால், கரைச்சி பிரதேச சபையினரின் ஒத்துழைப்போடு கைப்பற்றப்பட்டன.

மேலும், உரிய காலத்தில் அளவீட்டு நியமங்கள் செய்யாத 3 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன. (02)

## அமெரிக்கா பாடம் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனையும் இல்லாத தூக்கத்தில் இருக்கும் எம்.பி.க்களே என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் உண்மை மற்றும் இதன் பிரதான சூத்திரதாரிகள் குறித்து முழு நாடும் விழிப்புடன் இருந்து வருவதாகவும், இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எப்போதும் விழிப்புடன் இருந்து பேசி வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய அமெரிக்க குடியரசு செப்டம்பர் 11,2001 அன்று நடந்த தாக்குதல் குறித்து ஓர் ஆணைக்குழு அறிக்கையை தயார் செய்தாலும், இலங்கைப் போன்று பொய்யான நிபந்தனைகளை முன்வைத்து அறிக்கைகளை மறைக்கவில்லை என்றும், பாரபட்சமற்ற விசாரணையை முன்னெடுத்ததாகவும், கட்சி பேதமின்றி அவர்கள் ஆணைக்குழுவில் பணியாற்றியதால் உண்மையைக் கண்டறிய முடிந்ததாகவும், நீண்டகாலப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்ததாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அந்தத் தாக்குதலில் இருந்து அமெரிக்கா பாடம் கற்றுக் கொண்டாலும், நம் நாட்டுத் தலைவர்கள் இன்னும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (04)

## சிவாஜிலிங்கத்துக்கு கொழும்பு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிலையாகியபோது இந்தக் குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது. இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை இன்று சிவாஜிலிங்கத் திடம் கையளிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27 ஆவது பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினரான திலீபன் என்ற இராசையா பார்த்திபனின் 33 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை 2020 செப்டெம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம், கோண்டாவில், கோகுல வீதியில் நடத்தினார் என்றும், 2011 ஒகஸ்ட் 29ஆம் திகதி விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதற்காக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதிகளை மீறியதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட சிவாஜிலிங்கத்திற்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட 7 தவணைகளில் எம்.கே.சிவாஜிலிங்கம் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

கடந்த ஒகஸ்ட் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்ட சிவாஜிலிங்கம் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

இந்த நிலையில், சட்டத்தரணி உதார முஹந்திரத்தின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் சட்டத்தரணிகளான றியன்சி அரசகுலரத்ன, இரட்ணவேல் ஆகியோர் ஊடாக சிவாஜிலிங்கம் இன்று நீதிமன்றில் முன்னிலையானார்.

தமது கட்சிக்காரர் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்ததாகவும், நீதிமன்ற ஆணை குறித்து அறிந்த பின்னர் அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியதாகவும் அவரது சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

சிவாஜிலிங்கத்தின் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு அவரை பிணையில் விடுவிக்க வேண்டுமென்றும், அவரை விளக்கமறியலில் வைப்பது அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மேல் நீதிமன்ற நீதிபதி தனக்குள்ள அதிகாரத்தின்படி பிணை வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்தையும் பரிசீலித்த உயர்நீதிமன்ற நீதிபதி, தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் சிவாஜிலிங்கத்தை விடுவிக்கவும், இந்த வழக்கை ஒக்டோபர் 20 ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் சிவாஜிலிங்கத்தைக் கைது செய்த போது கைப்பற்றிய வாழைக்குற்றி, கற்பூரம் உள்ளிட்ட பொருட்களை பொலிசார் சான்றுப் பொருட்களாகக் குறிப்பிட்டிருந்தனர். (01)

## திலீபனின் நினைவேந்தலுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில், திலீபன் நினைவேந்தல் வன்முறை வடிவம் எடுப்பதால், அவசரமாக நினைவேந்தலுக்குத் தடை விதிக்க வேண்டும் எனக் கோரிக்கை முன் வைத்திருந்தனர்.

அத்துடன், வவுனியா - பம்பைமடுவில், சிவில் உடையில் வந்து வீடியோ படம் பிடித்த புலனாய்வாளர்களின் கைத்தொலைபேசி பறிக்கப்பட்டு, காட்சிகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வீடியோவையும் நீதிவானுக்கு அவர்கள் திரையிட்டுக் காண்பித்தனர்.

"இந்தச் சம்பவத்துக்கு எதற்காக நினைவேந்தலைத் தடை விதிக்க வேண்டும்? அதற்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா?" - என்று நீதிவான் வினவியபோது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வன்முறை பரவலைத் தடுக்கத் திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் கோரினர்.

எனினும், இன்று மதியம் 1.30 மணியளவில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரிய பொலிஸாரின் இரண்டாவது மனுவையும் தள்ளுபடி செய்து நினைவேந்தலுக்குத் தடை விதிக்க முடியாது என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்து அறிவித்தது. (அ,01)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# வினாசியோடை மகாவித்தியாலயத்தில் சிறுவர் மகிழ்வூட்டும் நிகழ்வு நேற்று





பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிளிநொச்சி வினாசியோடை மகாவித்தியாலயத்தில் சிறுவர் மகிழ்வூட்டும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்றது.

குறித்த நிகழ்வு, கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் சிறுவர், பெண்கள் பிரிவினரின் ஏற்பாட்டில் வினாசியோடை மகாவித்தியாலய பதில் அதிபர் இ.வினோதராஜ் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் மகிழ்வக நிறுவனத்தின் (Center for Child Development)அனுசரணை மற்றும் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சிறுவர்களுக்கு மகிழ்வூட்டும் விளையாட்டு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. சிறுவர்களிடம் ஓர் மகிழ்ச்சியான மனநிலையை உருவாக்கும் நோக்கில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வினாசியோடை மகாவித்தியாலய பதில் அதிபர் இ.வினோதராஜ் இங்கு கருத்துத் தெரிவிக்கையில், சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்துவதும், அவர்களின் உளநல ஆரோக்கியத்தில் பங்குபெறுவதும் சமூகத்தின் எல்லோர்க்குமான முக்கிய பொறுப்பாகும். இன்றைய காலப்பகுதியில் பல்வேறுபட்ட நெருக்கடிகளின் மத்தியிலுள்ள சிறுவர்களை உள ஆற்றுகைப்படுத்த இவ்விதமான நிகழ்வுகள் துணை செய்கின்றன.

அதனடிப்படையில், மிகவும் பின்தங்கியுள்ள எமது பாடசாலையினை இச் செயற்றிட்டத்திற்கு தெரிவு செய்துள்ள கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு பாடசாலைச் சமூகம் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடந்த கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் கலைத்துறையில் எமது பாடசாலை மாணவி நினைச்சனா உதயகுமார் 3ஏ பெறுபேற்றினைப் பெற்று மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும், மயிலரசி மகேந்திரராசா ஏ, 2பி பெறுபேற்றினைப் பெற்று மாவட்டத்தில் 57 ஆம் நிலையினையும் பெற்றுக்கொண்டனர்.

2018 ஆம் ஆண்டு எமது பாடசாலையில் கல்விப் பொதுத்தராதர உயர்தரத்தில் கலைத்துறை ஆரம்பிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டு மூன்று மாணவர்களும், 2021 ஆம் ஆண்டு ஒருவரும், 2022 ஆம் ஆண்டு இரண்டு மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர், என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், சிறுவர் மகிழ்வக நிறுவன உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் சிறுவர் - பெண்கள் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத் துணை உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (02)

## அம்பாறை மாவட்ட நல்லிணக்கக் குழு இரண்டு நாள் வதிவிடச் செயலமர்வு



(எம்.எப். நவாஸ்)

அம்பாறை, செப்.22

அம்பாறை மாவட்ட நல்லிணக்கக் குழுவிற்கான இரண்டு நாள் வதிவிடச் செயலமர்வு அண்மையில் தனியார் விடுதியொன்றில், சமாதானமும் சமுகப் பணியும் என்ற அமைப்பின் தேசிய அமைப்பாளர் ரீ.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், திட்ட முகாமையாளர் ரீ.ராஜேந்திரன், திட்ட இணைப்பாளர் என்.பாஸ்கர், திட்ட உத்தியோகத்தர் எம்.எல்.எம்.மாஜித் ஆகியோருடன் அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதுவப்படுத்தும் மூவின மக்களிலிருந்தும் இருபது பிரதேச செயலகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களும் கலந்து கொண்டனர்.




## புஷ்பக 27 இன் மற்றுமொரு காட்சி 24 ஆம் திகதி ஞாயிறு ராஜாவில்!

முற்று முழுதாக ஈழத்துக்கலைஞர்களால் யாழ்ப்பாணத்திலேயே தயாரித்து கடந்த 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட, தமிழரின் தொன்மத்தினைத் தேடிச் செல்லும் ஒரு முழு நீள விண்வெளித் திரைப்படம் புஷ்பக 27. அதனது மற்றுமொரு காட்சி வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று, மாலை 4.45 மணிக்கு யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் திரையிடப்படவிருக்கின்றது. (04)




தொழிற்துறைத் திணைக்களம்
வடக்கு மாகாணம்
Tourism
Northern Province
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
உலக சுற்றுலா தினம்
2023
செப்டெம்பர்
27, 28, 29
மாலை
4.00 மணி
தொடக்கம்
இரவு
9.00 மணி
வரை
இடம் :- யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகம்
உணவு மற்றும் கைப்பணிப் பொருள் சந்தை
கலாசாரத் திருவிழா
அனுசரணையாளர்கள் :-
HNB
BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
COMMERCIAL BANK
The Thinnai
Jetwing
JAFFNA
TILKO
JAFFNA CITY HOTEL
Chrysalis
Catalyzing change
ஊடக அனுசரணையாளர் :-
காலைக்கதிர்
Kalaikkathir
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

# அம்பாறை மாவட்ட சமூக சேவை அமைப்புகள் அரச சார்பற்ற நிறுவனங்கள் கலந்துரையாடல்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களின் கீழும் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான விசேட கலந்துரையாடல் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் இளங்குமுதன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமூக சேவை திணைகளத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் 19 பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்கள், பதிவு செய்யப்பட்ட சமூக சேவை அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின் போது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்டு செயற்பாட்டில் இல்லாத அமைப்புகளை அவர்களின் பதிவினை மீள் பரிசீலனை செய்து அவ்வாறான அமைப்புக்களை வறிதாக்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் கூறப்பட்டது.





அம்பாறை மாவட்ட பதிவு செய்யப்பட்ட சமூக சேவைகள் அமைப்பு மற்றும் அரச சார்பாற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய சம்மேளனம் உருவாக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான சம்மேளனங்கள் ஏற்கனவே மட்டக்களப்பு மற்றும் திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளமையால், தெரிவு செய்யப்படவிருக்கின்ற அம்பாறை மாவட்ட சம்மேளனத்தையும் உள்ளடக்கிய சம்மேளன நிர்வாகிகளை வைத்து கிழக்கு மாகாணத்துக்குரிய சம்மேளனம் மிக விரைவில் உறுவாக்கப்பட இருப்பதாகவும் பணிப்பாளரால் தகவல் வழங்கப்பட்டது.

அதவருகை தந்த அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டு, அம்பாறை மாவட்டத்திற்குரிய சம்மேளனம் உருவாக்கப்பட்டது. தலைவர், செயலாளர் பொருளாளர், உபதலைவர், உபசெயலாளர் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களாக 19 பிரதேச செயலகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தி, 20 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டுகால ஆங்கில தின விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆங்கில மன்றம் நடத்திய நூற்றாண்டு கால ஆங்கில தின விழா இன்று காலை 9 மணிக்கு கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் எம்.ஜீவராணிபுனிதாவும், சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரிய கலாசாலையின் ஓய்வுநிலை அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக கலாசாலையின் முன்னாள் ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி எம்.ஜே.எஸ். முத்துக்குமாரசாமியும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி சு.பரமானந்தம் மற்றும் ஆங்கிலத்துறை விரிவுரையாளர்களான முகுந்தன், பற்றிக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆங்கில தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளுக்கான பரிசளிப்பு மற்றும் ஆசிரிய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (04)

## சிற்றூழியர்களுக்கும் சாரதிகளுக்கும் கல்முனையில் பயிற்சிக் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண அரச திணைக்களங்களில் அலுவலக சிற்றூழியர்கள் மற்றும் சாரதிகளாக பணியாற்றுபவர்களுக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவினால் நேற்று பயிற்சிக் கருத்தரங்கொன்று நடாத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற குறித்த பயிற்சிக் கருத்தரங்கில் அலுவலக சிற்றூழியர்கள், சாரதிகள் என 70 பேர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் நிருவாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.றஹீம் பிரதம வளவாளராகக் கலந்துகொண்டு அலுவலகப் பணியாளர்களின் அரச கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பாக விரிவுரை நிகழ்த்தினார்.

இப்பயிற்சிக் கருத்தரங்கில் பல நோக்கு அபிவிருத்திச் செயலணித் திட்டத்தின் கீழ் அண்மையில் நிரந்தர நியமனம் கிடைக்கப்பெற்றவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.




## கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியில் மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி





கிளிநொச்சி மாவட்டத்தின் தர்மபுரம் மத்திய கல்லூரியில் ஐந்து வருடங்களுக்குப் பின்னராக மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி இன்றைய தினம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இக்கண்காட்சியினை அயல் பாடசாலை மணவர்கள், ஆசிரியர்கள் பார்வையிட்டனர்.

மாணவர்களின் அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ளும் வகையில் மாணவர்களின் தமது கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான ஆக்கப் பொருட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (02)

# அசர்பைஜான் - ஆர்மீனிய ஆதரவு பிரிவினைவாத படைகளுக்கு இடையிலான பேச்சுக்கள் நிறைவு



சர்ச்சைக்குரிய நகோர்னோ-கராபக் பிராந்தியத்தின் எதிர்காலம் குறித்து அசர்பைஜான் மற்றும் ஆர்மீனிய ஆதரவு பிரிவினைவாதப் படைகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தை வியாழக்கிழமை நிறைவடைந்தது.

இது குறித்து அசர்பைஜான் அரசுக்குச் சொந்தமான செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது. நகோர்னா-கராபக் பிராந்தியத்தை மீண்டும் அசர்பைஜானுடன் இணைப்பது தொடர்பான பேச்சுவார்த்தை யெவ்லாக் நகரில் வியாழக்கிழமை நடந்து முடிந்தது. இந்தப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக நடைபெற்றது என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

எனினும், இது தொடர்பான கூடுதல் விவரங்களையோ, இந்தப் பேச்சுவார்த்தையில் ஒப்பந்தம் எதுவும் மேற்கொள்ளப்பட்டதா என்பது குறித்தோ அந்தச் செய்தி நிறுவனம் தெரிவிக்கவில்லை.

சோவியத் யூனியனின் முன்னாள் உறுப்பு நாடுகளான ஆர்மீனியாவுக்கும், அசர்பைஜானுக்கும் இடையே நீண்ட காலமாக எல்லைப் பிரச்சினை இருந்து வருகிறது. ஆர்மீனியப் பழங்குடியினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நகோர்னோ-கராபக் பிராந்தியம், அசர்பைஜானின் ஓர் அங்கமாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இருந்தாலும், கடந்த 1994 ஆம் ஆண்டு போருக்குப் பிறகு அந்தப் பகுதி ஆர்மீனியா ஆதரவு பெற்ற பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தப் பிராந்தியத்தில் ஆர்மீனியாவும், அசர்பைஜானும் தங்களது படைகளைக் குவித்துள்ளன. இதனால், இரு தரப்பினரும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். நகார்னோ - கராபக் பிராந்தியத்தில் இரு நாட்டுப் படையினருக்கும் இடையே கடந்த 2020 இல் நடைபெற்ற 6 வாரப் போரில் 6,600 இக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இந்தப் போரின்போது முக்கியத்துவம் வாய்ந்த சில பகுதிகளை அசர்பைஜான் ராணுவம் மீட்டது.

இந்த நிலையில், ஆர்மீனியாவின் கண்ணி வெடியில் தங்கள் நாட்டைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்ததால் நகோர்னோ-கராபக் பிராந்தியத்தில் 'பயங்கரவாதத் தடுப்பு' நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறி அந்தப் பகுதியில் அசர்பைஜான் தாக்குதல் நடவடிக்கையை கடந்த செவ்வாய்க்கிழமை தொடங்கியது. இது, கடந்த 2020 ஆம் ஆண்டைப் போலவே முழுப் போராக உருவெடுத்து, ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியது.

அதையடுத்து, 2020 ஆம் ஆண்டுப் போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் அந்தப் பகுதியில் அமைதி காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ரஷ்யப் படையினர், இரு தரப்பினருக்கும் இடையே சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தினர். இதில், ஆயுதங்களைக் கைவிடுவதாக ஆர்மீனிய பிரிவினைவாதப் படையினர் ஒப்புக்கொண்டனர். அதற்குப் பதிலாக தாக்குதலை அசர்பைஜான் நிறுத்திவைத்தது.

அதனைத் தொடர்ந்து, அசர்பைஜான் கட்டுப்பாட்டில் இருக்கும் நகோர்னா - கராபக் பிராந்தியப் பகுதிகளை அந்த நாட்டுடன் இணைப்பது குறித்த பேச்சுவார்த்தை வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது. இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவு குறித்து ஆர்மீனிய பிரிவினைவாதிகள் தரப்பிலும் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (04)

# பாகிஸ்தான் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டில் நடைபெறுமென அறிவிப்பு



பாகிஸ்தான் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் 2024 ஆண்டு, ஜனவரி கடைசி வாரத்தில் நடைபெறும் என தேர்தல் ஆணையம் வியாழக்கிழமை அறிவித்தது.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சி தலைமையிலான கூட்டணி ஆட்சி பாகிஸ்தானில் நடைபெற்று வந்தது. அக்கட்சியின் தலைவர் ஷபாஸ் ஷெரீஃப் பிரதமராக இருந்த நிலையில், நாடாளுமன்றம் அதன் பதவிக் காலம் நிறைவடைவதற்கு மூன்று நாள்கள் முன்னதாக கடந்த ஓகஸ்ட் 9 ஆம் திகதி கலைக்கப்பட்டது.

பாகிஸ்தான் அரசமைப்புச் சட்டப்படி அடுத்த பொதுத் தேர்தல் 90 நாள்களுக்குள் நடத்தப்பட வேண்டும். ஆனால், அங்கு இந்தாண்டு நடத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுவரையறை நிறைவடையாததால் தேர்தல் அறிவிப்பை வெளியிடுவதில் தேர்தல் ஆணையம் தாமதித்து வந்தது.

இந்நிலையில், பொதுத் தேர்தல் குறித்த அறிவிப்பை ஆணையம் வெளியிட்டுள்ளது. அதில், தொகுதி மறுவரையறையின் முதல்கட்டப் பட்டியல் செப்டெம்பர். 27 ஆம் திகதி வெளியிடப்படும். தொகுதி மறுவரையறை தொடர்பான கட்சிகளின் ஆட்சேபங்களுக்கு தீர்வு கண்ட பிறகு இறுதிப் பட்டியல் நவம்பர் 30 இல் வெளியிடப்படும். அதன் பின்னர் தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்டு, ஜனவரி கடைசி வாரத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் தற்போது இடைக்காலப் பிரதமராக ஆளும் கூட்டணிக் கட்சியான பலுசிஸ்தான் அவாமி லீக்கைச் சேர்ந்த அன்வருல் கக்கார் இருந்து வருகிறார். பொதுத் தேர்தல் நிறைவடைந்து புதிய பிரதமர் தேர்வு செய்யப்படும் வரை அவர் பதவியில் தொடர்வார். ஊழல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் இம்ரான்கானின் பாகிஸ்தான்-ஏ-இன்சாஃப் கட்சியின் நிறுவன உறுப்பினரும் நாட்டின் அதிபருமான ஆரிஃப் ஆல்வி, நவம்பர் 6 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமென பரிந்துரை செய்திருந்தார். ஆனால், அவரது யோசனை தொடர்பாக தேர்தல் ஆணையம் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. (04)

# கனடியருக்கு விசா வழங்கல் இந்தியத் தூதரகம் நிறுத்தியது



இருநாடுகளுக்கும் இடையே தூதரக உறவில் சிக்கல் எழுந்திருக்கும் நிலையில், கனடா நாட்டில் விசா வழங்கும் நடைமுறையை அந்நாட்டில் உள்ள இந்தியத் தூதரகம் நிறுத்தியிருக்கிறது.

விசா வழங்கும் நடவடிக்கையை இந்தியா நிறுத்தியதால், கனடாவிலிருந்து இந்தியாவுக்கு யாரும் வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

காலிஸ்தான் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் கனடாவில் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில், கனடா - இந்தியா நாடுகளுக்கு இடையேயான உறவில் விரிசில் ஏற்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து கனடா செல்லும் மக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறு மத்திய அரசு நேற்று பயண எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், கனடாவிலிருந்து வருவோருக்கு விசா வழங்குவதை இந்தியத் தூதரகம் இன்று நிறுத்தியிருக்கிறது.

இந்தியாவால் தேடப்பட்டு வந்த காலிஸ்தான் பிரிவினைவாத பயங்கரவாதி ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கனடாவில் கொல்லப்பட்டதற்கு இந்திய அரசு ஏஜெண்ட்களின் தலையீடு உள்ளதாக அந்நாட்டுப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியிருந்தார். இதைத் தொடர்ந்து, அந்நாட்டில் உள்ள இந்தியத் தூதரக மூத்த அதிகாரியை வெளியேறுமாறும் கனடா அரசு உத்தரவிட்டது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்த இந்திய அரசு, பதிலடியாக இந்தியாவில் உள்ள கனடா தூதரக உயர் அதிகாரியை வெளியேற உத்தரவிட்டது. இந்த விவகாரம் இரு நாடுகளுக்கும் இடையே கடந்த சில மாதங்களாகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி வந்த நிலையில், தற்போது அது மேலும் தீவிரமடைந்துள்ளது. (04)

# ஈரானில் ஹிஜாப் அணியாத பெண்களுக்கு 10 வருட சிறை

ஈரானில் பெண்கள் ஆடைக் கட்டுப்பாட்டை மீறினால் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கும் சட்டமூலம் அந்த நாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானில் பெண்கள் வெளியே செல்லும்போது ஹிஜாப் அணிய வேண்டியது கட்டாயமாக உள்ளது. எனினும் அங்கு ஹிஜாப்புக்கு எதிராக குரல்கள் வலுத்து வருகின்றன. கடந்த ஆண்டு ஹிஜாப் அணியாத இளம் பெண் ஒருவர் காணாமல் போன நிலையில் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார். இதையடுத்து அங்கு போராட்டங்கள் வெடித்தன.

இந்நிலையில் ஈரான் அரசு, பெண்களின் ஆடைக் கட்டுப்பாட்டுக்காக ஒரு சட்டமூலத்தை நிறைவேற்றியுள்ளது. அதன்படி, ஈரானில் பொது இடங்களில் பெண்கள் ஹிஜாப் அணியாமல் சென்றால், ஆடைக் கட்டுப்பாட்டை மீறினால் 5 முதல் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும். அவர்களுக்கு அபராதம் விதிக்கவும் இந்தச் சட்டமூலம் வழிவகை செய்கிறது. (04)

# ரஷ்ய - வட கொரிய ராணுவ ஒத்துழைப்பு அபாயகரமானது என்கிறது தென் கொரியா

ரஷ்யாவுக்கும், வட கொரியாவுக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பு ஏற்படுவது சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரானதும், அபாயகரமானதும் ஆகும் என்று தென் கொரியா எச்சரித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. பொதுச் சபையில் அந்த நாட்டின் அதிபர் யூன் சுக்-இயோல் உரையாற்றும்போது, வட கொரிய அதிபர் கிம் ஜோங்-உன் அண்மையில் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே ராணுவ ஒத்துழைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடான ரஷ்யா, வட கொரியாவுடன் இதுபோன்ற ராணுவக் கூட்டணி அமைப்பது மிகவும் அபாயகரமானதாக அமையும். மேலும், சர்வதேசச் சட்டங்களுக்கு அது எதிரானது, என்று குறிப்பிட்டார்.

கொரிய தீபகற்பத்தில் கடந்த 1950 களின்போது உள்நாட்டுப் போர் வெடித்தது. அந்தப் போரில் ஒரு தரப்புக்கு சோவியத் யூனியனும், மற்றொரு தரப்புக்கு அமெரிக்காவும் உதவின. இறுதில் 1953 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்துக்குப் பிறகு, கொரிய தீபகற்பத்தின் வடக்குப் பகுதியில் கிம்-ஜோங்-உன்-னின் தாத்தா கிம் இல்-சங் தலைமையிலான கம்யூனிச அரசும், தெற்குப் பகுதியில் அமெரிக்க ஆதரவுடன் ஜனநாயக அரசும் அமைந்தன. அதிலிருந்தே வட கொரியாவுக்கும், அமெரிக்க-தென் கொரிய கூட்டணிக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது.



வலிமை மிக்க அமெரிக்காவை எதிர்கொள்வதற்காக, சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி அணு ஆயுத சோதனையை வட கொரியா நடத்தியது. மேலும், அந்த அணு ஆயுதங்களை ஏந்தி சென்று முக்கிய இலக்குகளைத் தாக்குவதற்கான 'பொலிஸ்டிக்' வகை ஏவுகணைகளையும் வட கொரியா உருவாக்கி வருகிறது. இதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை தடை விதித்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபை கொண்டு வந்த அனைத்துத் தீர்மானங்களையும் ரஷ்யா ஆதரித்து வந்தது. இந்தச் சூழலில், உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்கான ஆயுத வெடிபொருள்களின் கையிருப்பு ரஷ்யாவிடம் குறைந்து வருவதாலும், பொருளாதாரத் தடைகள் காரணமாக அவற்றைப் பிற நாடுகளிலிருந்து வாங்க முடியாததாலும் வட கொரியாவிடமிருந்து ஏவுகணைகள் மற்றும் விமான எதிர்ப்பு எறிகணைகளை வாங்க ரஷ்யா திட்டமிட்டுள்ளதாக மேற்கத்திய ஊடகங்கள் அண்மையில் கூறியிருந்தன.

அதனை உறுதி செய்யும் வகையில், குண்டு துளைக்காக தனி ரயில் மூலம் ரஷ்யாவுக்கு கிம் ஜோங்-உன் கடந்த 12 ஆம் தேதி சென்றார். அங்கு அதிபர் புடினை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய அவர், ராணுவத் தொழிநுட்ப முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளைப் பார்வையிட்டார்.

எனவே, ரஷ்யாவுக்கு வடகொரியா ஆயுதங்களை வழங்கவும், அதற்குப் பதிலாக வட கொரியாவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தொழிநுட்பங்களை ரஷ்யா அளிப்பதற்குமான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. அத்தகைய தொழிநுட்பப் பரிமாற்றம் வட கொரியா வின் அணு ஆயுதத் திட்டத்தை மேம்படுத்துவதற்குப் பயன்படும் என்று தென் கொரியா எச்சரித்து வருகிறது. (04)

# இந்தியாவில் ஐபோன் 15 சீரிஸ் விற்பனை அதிகாலை 3 மணிக்கே குவிந்த மக்கள்!

ஐபோன் 15 சீரிஸ் கைப்பேசிகள் இந்தியா உட்பட உலக நாடுகளில் இன்று முதல் விற்பனைக்கு வந்துள்ளது.

அதனை வாங்கிட அதிகாலை 3 மணி முதல் அப்பிள் சாதன ஆர்வலர்கள், டெல்லி மற்றும் மும்பையில் அமைந்துள்ள இரண்டு அப்பிள் ஸ்டோருக்கு வெளியேயும் நீண்ட வரிசையில் காத்திருந்து வாங்கிச் சென்றுள்ளனர்.

டெல்லியில் காலை 8 மணி அளவில் அப்பிள் ஸ்டோர் திறக்கப்பட்டது. அந்த ஸ்டோரில் உள்ள ஊழியர்கள் பகுதி பகுதியாக வாடிக்கையாளர்களிடம் கைப்பேசிகளை விற்பனை செய்து வருகின்றனர். டெல்லி மற்றும் மும்பையில் அப்பிள் ஸ்டோர் நிறுவப்பட்ட பிறகு சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள முதல் ஐபோன் சீரிஸாக ஐபோன் 15 அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஐபோன் 15, ஐபோன் 15, ஐபோன் 15 புரோ மற்றும் ஐபோன் 15 புரோ மக்ஸ் என நான்கு மொடல்களை ஐபோன் 15 சீரிஸில் அப்பிள் அறிமுகம் செய்துள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் இதன் முன்பதிவு தொடங்கியது. டெல்லியில் அப்பிள் ஸ்டோர் அமைந்துள்ள வர்த்தகக் கட்டடத் தொகுதிக்கு வெளியில் நீண்ட வரிசையில் நின்று அப்பிள் ஐபோன் 15 போன்களை ஆர்வலர்கள் காத்திருந்து வாங்கிச் சென்றனர். (04)








சந்திரகுமார் யதுஷினி
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# பூகோளமயமாக்கலும் கலாசாரமும்

உள்ளங்கையில் உலகம் - என்ற வார்த்தையை பள்ளி செல்லும் காலங்களில் பாடப் புத்தகங்களிலோ அல்லது ஏதேனும் பத்திரிகைகளிலோ வாசிக்கின்ற போது அது என்னடா! உள்ளங்கையில் உலகமா? என்று வியப்படைந்த தருணங்களை இப்போது நினைத்துப் பார்க்கையில் இதழோரம் புன்னகை வருகிறது!

பூகோளமயமாக்கலின் மாற்றமே இந்த நிலைப்பாட்டிற்கு அடிப்படை என அறிந்துகொள்ளும்போது சிந்தனை விழித்துக் கொள்கிறது.

1990 களில் டங்காஸ்" அறிக்கையைத் தொடர்ந்து முக்கியம் பெறத் தொடங்கிய கருத்தியலே பூகோளமயமாக்கல் அல்லது உலகமயமாக்கல் எண்ணக்கருவாகும்.

உலகமயமாக்கல் என்றால் என்ன?

பொருளாதார, தொழிநுட்ப, கலாசார மற்றும் அரசியல் பிணைப்புகளுக்கு ஊடாக உலக மக்களை மிக அருகில் எடுத்துவருவதே பூகோளமயமாக்கல் அல்லது உலகமயமாக்கல் எனப்படுகிறது.

ஒவ்வொரு துறைசார்ந்தும் மக்களை ஒருங்கிணைக்கும் இந்தச் செயன்முறையானது அவர்களை ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் உருவாக்க மறக்கவில்லை.

பூகோளமயமாதலுக்கான காரணமாக அமையப்பெற்ற, குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, வர்த்தகத் தாராளமயமாக்கல், மூலதனத்தின் அதிகரிப்பு, இலகுவான போக்குவரத்து, குறைவான, கடுமையான குடியேற்றக் கொள்கைகள், சந்தைப்படுத்தல் என்பன அரசியல், சமூக, பொருளாதார மற்றும் கலாசார ரீதியாக சமூகங்கள் ஒன்றுபட்டு ஒரே சமூகத்திற்குள் எல்லா மக்களும் ஒன்றிணையக்கூடிய சூழ்நிலையை உருவாகியிருக்கிறது என்றே கூற வேண்டும்.

இதனால்தான் உலகமே உள்ளங்கையில் என்றும், உலகமே குக்கிராமமாக மாறி உள்ளது என்றும் பேசப்படுவதைக் காணமுடிகிறது.

உலகமயமாக்கலானது – புவியியல் உலகமயமாதல், அரசியல் உலகமயமாதல், சமூகவியல் உலகமயமாதல், நிதி உலகமயமாதல், பொருளாதார உலகமயமாதல், தொழிநுட்ப உலகமயமாதல் மற்றும் கலாசார உலகமயமாதல் எனப் பல வகைகளில் அமையக் காணப்படுகின்றது.

பூகோளமயமாக்கல் - கலாசாரம் மீதும் ஈர்ப்புக் கொண்டதால் உள்ளூர்க் கலாசாரமும் மேற்கத்தேய கலாசாரமாகப் பரிணமித்தது. கால மாற்றங்களோடு மனிதர்களாகிய நாமும்தான் மாறிவிட்டோம்!

கலாசாரம் என்றால் என்ன?

எப்பொழுதும் ஒரு சமூகமானது தன்னுடைய சொந்த கலாசாரங்களைக் கொண்டு இயங்கி வருவதோடு சமூகத்தில் இருந்து பிரிக்க முடியாத தவிர்க்க முடியாத கருப்பொருளாக அமைகின்றது. அதாவது, குறிப்பிட்ட சமுதாயத்தின் நம்பிக்கைகள், விதிகள், சடங்குகள், குறியீடுகள் போன்றவற்றின் இணைப்பினால் உண்டாகும் வெளிப்பாடே கலாசாரம் எனும் விதை.

ஐக்கியநாடுகளின் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனமான யுனெஸ்கோ "ஒரு சமூகத்தின் அல்லது சமூகக் குழுவொன்றின் தனித்துவமான ஆன்மீக, பொருளாதார, அறிவு சார்ந்த மற்றும் உணர்வு ரீதியான ஒட்டுமொத்த அம்சங்களின் தொகுப்பே கலாசாரம் என வரையறுக்கிறது. இது கலை மற்றும் இலக்கியத்துக்கு மேலதிகமாக வாழ்க்கை முறை, ஒன்றிணைந்து வாழும் முறை, பாரம்பரியங்கள் மற்றும் நம்பிக்கைகளை உள்ளடக்கியிருக்கிறது.

ஒன்றையொன்று பின்னிக்கொண்டிருக்கும் சமூகச் சங்கிலிக்குள்ளேயே நாம் வாழ்ந்துகொண்டிருப்பதால் இவ்வாறான வாழ்க்கையில் மொத்த மனிதக் கூட்டத்தையும் சரியான பாதைக்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காகவே மனிதன் என்பவன் இப்படித்தான் வாழவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அத்தகைய கட்டுப்பாடுகளின்படி வழிவழியாக மக்கள் வாழ்வதே கலாசாரம் எனப்படுகிறது.

உலகமயமாக்கலினால் வெவ்வேறு சமூகங்கள் ஒன்றோடொன்று இணையும்போது உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பாரம்பரியம், பழக்கவழக்கங்கள் பகிரப்படுவதால் கலாசார பரிமாற்றம் இடம்பெறுகிறது.

கலாசாரமயமாக்கம் என்றால் என்ன?

ஒரு காலநிலையில் என்ன உணவு கிடைக்கின்றதோ அதை மட்டும் உண்டு வாழ்ந்த நிலை எங்கும் இல்லை. அப்படியே உண்ணபட்டாலும் அவற்றுக்காகப் பயன்படுத்தும் பொருட்கள் முதல் சமைக்கும் முறை, உண்ணும் முறை என அனைத்திலும் மாற்றங்கள் இருக்கின்றன.

வாழிடங்களுக்கு அருகில் கிடைத்த பொருட்களை வைத்து வீடு கட்டி இயற்கையோடு சேர்ந்து வாழ்ந்த வாழ்வியல் முறைக்குப் பதிலாக, அயலவர் கூட வீட்டிற்கு வர முடியாத அளவுக்கு கட்டிடம் அமைத்து வாழ்ந்து வருகின்றோம். பல்வேறு விதமான சமய நம்பிக்கைகளை பின்பற்றுகின்றோம். ஆங்கில மொழியில் பேசுகின்றோம். தொழில் ரீதியாகவும் மத ரீதியாகவும் தனித்த அடையாளத்துடன் அணியப்பட்ட ஆடைகளுக்குப் பதிலாக விதவிதமான ஆடைகளை அணிகின்றோம்.

உணவு, இருப்பிடம், மொழி, பழக்கவழக்கங்கள் போன்ற கலாசாரக் கூறுகளில் ஏதோ ஒரு வகையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றனதானே? இவை பற்றி ஆழமாக ஆராய்கின்றபோது பூகோளமயமாக்கல் ஏற்படுத்தியிருக்கின்ற கலாசாரமயமாக்கத்தை அறிந்து கொள்ளமுடியும்.

ஒவ்வொரு நாட்டிலுமே அபிவிருத்திக்கு அடிகோலிட்டு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருக்கின்ற பூகோளமயமாக்கல், கலாசார ரீதியில் ஏற்படுத்திய மாற்றங்களுக்கு அடிப்படையாக அமைந்த விடயங்களுள் தகவல் தொடர்பு சாதனங்களின் பங்கு குறிப்பிடத்தக்கது.

இணைய ஊடகம், வெகுஜன ஊடகம் என்பவற்றின் காரணமாக எல்லைதாண்டி வெளியாகும் திரைப் படங்கள், விளம்பரங்கள் கலாசார பரிமாற்றத்தில் முக்கிய மைக்கல்லாக அமைந்துவிடுகின்றன. உற்பத்தி, பொழுதுபோக்கு ஆகியவற்றின் மாதிரியுடன் வெளியாகத் தொடங்கும் ஊடகங்கள் வழியாக முன்வைக்கப்படும் கலாசாரத்தை நுகரத் தலைப்படும் மக்கள் காலப்போக்கில் அதனையே பின்பற்றத் தொடங்கிவிடுகின்றனர்.

வர்த்தக ரீதியில் உலக நாடுகளிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலை, குடிபெயர்வு, சுற்றுலாப் பயணங்கள் காரணமாக ஓர் நாட்டிலிருந்து இன்னொரு நாட்டில் வாழ்வதற்கு மக்கள் பழகியமை என்பன கலாசாரப் பரிமாற்றத்திற்கு வித்திட்டன என்பதும் மறுப்பதற்கில்லை.

கால ஓட்டங்களின் சுழற்சியில் மாறித்தான் ஆக வேண்டும், என்ற எண்ணமும் மாற்றத்தை ஏற்காவிட்டால் எந்த சமூகமும் நிலைபெற முடியாது என்கின்ற நிலைப்பாடும் விதைக்கப்பட்டு வெவ்வேறு சமூகங்கள் ஒன்றோடொன்று இயைபுற்று கலாசாரமயமாக்கம் உருவாகியிருக்கிறது.

கலாசாரம் பாதிக்கப்பட்டதா?

யாதும் ஊரே யாவரும் கேளீர் என்ற வரிகளுக்கமைய உலகிலுள்ள அனைவரும் பூகோளமயமாதலினால் உறவினர்களாகி ஏனைய சமூகங்களின் வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள், கலை, மொழி பற்றி அறிந்துகொள்ளும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது.

பொதுவான பழக்கவழக்கங்களை உள்ளடக்கிய மற்றும் தனிநபர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே மாதிரியான கலாசாரம் ஆரம்பமாகியமை, அதிகமான சமூகங்கள் வித்தியாசமாக இருந்தாலும், உலகமயமாக்கல் காரணமாக பொதுவான விடயங்களைப் பகிர்ந்து கொள்ள முடிகின்றமை, மக்கள் தங்கள் அறிவையும் வளர்ச்சிக்கான சாத்தியங்களையும் விரிவுபடுத்துவதற்காக மிகவும் பரவலாகப் பேசப்படும் மொழிகளைக் கற்றுக்கொள்வதில் அக்கறை கொள்கின்ற சூழல் காணப்படுவதும் நேர்மறையான விளைவுகளாகக் காணப்படுகின்றன.

உணவு, உடை முறைகளில் பாதுகாத்து வருகின்ற பாரம்பரியங்களுக்குப் பாதிப்பேற்படுவதால் சுதேச கலாசாரம் பற்றிய பயவுணர்வு ஏற்படுகின்றது. உலக மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்வதும், வலைப்பின்னல் யுகத்தில் ஒருசில மொழிகளே இணையத் தொடர்பு மொழிகளாக எழுச்சிபெறுவதும், தொழிநுட்ப வலுவற்ற மொழிக்கூட்டமும் சிறு சிறு மொழிகளும் இலக்கண இலக்கிய முனைப்புகள் இல்லாது அழிந்து விடக் கூடிய தன்மை உருவாகுவதும், எல்லா நாடுகளிலும் புதிய நிலைமையில் இறைச்சி, பாலுணவுகள், பதப்படுத்தப்பட்ட சீனி வகைகள் அடங்கிய உடன் உணவுகளை நாடுவதால் நோய் நிலைமைகளுக்கு காரணமாகிறது.

குறைவான நபர்களைக் கொண்ட சமூகங்கள் அதிக நபர்களை கொண்ட சமூகங்களின் கலாசாரச் செல்வாக்கால் பாதிக்கப்படுகின்ற தன்மை உருவாகுவதும், இடம்பெயர்ந்த மக்களின் பழக்கவழக்கங்கள் அல்லது கலாசார மரபுகள் தொலைந்து போகும் அல்லது மறந்து போகும் அபாயம் உள்ளமையும், பிரபலமான கலாசாரத்தை உருவாக்குவதன் மூலம் கலாசாரப் பன்முகத்தன்மை குறைவதும், கலாசார பூகோளமயமாக்கல் ஒரு தேசத்தின் இறையாண்மையை இழக்க வழிவகுப்பதும் கலாசாரமயமாக்கலினால் ஏற்பட்டிருக்கின்ற எதிர்மறையான விளைவுகளாகும்.

கலாசாரமயமாக்கத்தின் விளைவுகள் பெருமளவில் எதிரிடையேயான அர்த்தங்களையே கொண்டிருப்பதால் ஒவ்வொரு நாட்டினதும் கலாசாரத் தனித்துவத்தையும் நாடுகளுக்கிடையிலான இணைப்பையும் பேணும் விதத்தில், அதாவது வேற்றுமையில் ஒற்றுமையை உறுதிப்படுத்தக்கூடிய மாற்றுவழிகள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.



# அதிகரித்த மன அழுத்தம் சரும நோய்களின் அபாயத்தை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு

## சரும நோய் விசேட மருத்துவர் ஜானக அகரவிட்ட

இலங்கையில் சரும நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதிகரித்து வரும் மன அழுத்தமே இந்த நிலைக்குக் காரணமாக இருக்கலாம் எனவும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சரும நோய் விசேட மருத்துவ நிபுணர் ஜானக அகரவிட்ட தெரிவித்தார்.

கொழும்பு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் இடம்பெற்ற சரும அழற்சி நோய் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளில் உள்ள சரும நோய் சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்ட மருத்துவ நிபுணர் ஜானக, சரும நோய்களால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் அல்லது 40 சதவீதம் பேர் எக்ஸிமா என்ற சரும நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது என்றார்.

அரிக்கும் தன்மை கொண்ட சரும அழற்சி பொதுவாக சருமத்தில் ஒவ்வாத சில பொருட்கள் உரசி விடுவதால் அல்லது படிந்து விடுவதால் ஏற்படுகின்றது. சிலருக்கு றப்பர் ஸ்லிப்பர்கள் அல்லது சிமெண்ட் போன்றவற்றின் தாக்கத்தாலும், சரும உரசல் காரணமாகவும், இன்னும் சிலருக்கு தலைமுடிச் சாயங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்களின் பாவனை காரணமாகவும் இந்நோய் ஏற்படுகின்றது.

தலைமுடிச் சாயங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர், அதை கையின் உட்புறத்தில் தடவி, அதைச் சோதித்துப் பார்த்து ஒவ்வாமை இல்லை என்றால் மாத்திரமே பயன்படுத்துவது நல்லது. அரிக்கும் தன்மை கொண்ட சரும அழற்சியின் முக்கிய அறிகுறிகளாக சருமத்தின் மேற்பரப்பில் அரிப்பு (சிறு குழந்தைகளின் கன்னங்கள் மற்றும் மூக்கில்), தோல் சிவத்தல், சரும மேற்பரப்பு உரிதல், சருமம் வறண்டு போதல் ஆகியனவற்றை குறிப்பிடலாம்.

சரும நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கைச் சந்தைகளில் கிடைக்கின்ற அழகுசாதனப் பொருட்களின் வகைகளை ஒழுங்குபடுத்த வேண்டும் என்றும் அதற்காக தற்போதுள்ள சட்டத்தை விட செயல் திறன்மிக்க வழிவகைகளை ஏற்படுத்துதல் தேவையாகும், என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ரெ-18)



# குடும்பத் தேவைகளுக்காக உயரதிகாரிகளின் 2000 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன

## புலனாய்வுத்துறை அறிக்கை தெரிவிப்பு



புலனாய்வுத்துறை அரசுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி, பல்வேறு பதவி நிலைகளைக் கொண்ட அரசியல்வாதிகள், பொலிஸ் துறை, இராணுவம் உட்பட பல்வேறு அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட கிட்டத்தட்ட இரண்டாயிரம் உத்தியோகபூர்வ வாகனங்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தியிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக பெருமளவு பணம் விரயமாகி வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சில அதிகாரிகள் தமது தனிப்பட்ட சொந்த வாகனங்களை தாம் பணிபுரியும் நிறுவனத்திற்கு வாடகைக்கு வழங்கி அதன்மூலம் வாடகைப் பணத்தை பெறும் அதேவேளையில், அவ்வாகனங்களை தமது உத்தியோகபூர்வ வாகனமாகவும் பயன்படுத்துகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகபூர்வ வாகனங்கள் பெரும்பாலும் அதிகாரிகளின் மனைவிமாரின் பயணங்களுக்கும், அவர்களின் பிள்ளைகள் பாடசாலை செல்வதற்கும் பயன்படுத்தப்படுவதாக புலனாய்வுப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

தமது குடும்ப உறுப்பினர்களின் பயணங்களுக்கு பாதுகாப்புப் பிரிவினரின் வாகன ஓட்டுனர்களும் பயன்படுத்தப்படுவதாலும், அரச அதிகாரிகளுக்கு அரசால் வழங்கப்படும் எரிபொருளைப் பயன்படுத்துவதாலும் இந்த இழப்பு இரட்டிப்பாகியுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்த புலனாய்வு அறிக்கை தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரியவருகின்றது. (ரெ-19)

# ஸ்ரீ.சு. கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு சிரேஷ்ட உறுப்பினர்களிடையே பலத்த போட்டி

வெற்றிடமாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு கடும் போட்டி நிலவி வருவதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கட்சியின் சிரேஷ்ட பிரதி செயலாளர் சரத் ஏக்கநாயக்க மற்றும் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க ஆகியோருக்கு இடையில் பலத்த போட்டி ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டு, பிரதிச் செயலாளர் சரத் ஏக்கநாயக்க பதில் செயலாளராக நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அண்மையில் அவர் அந்தப் பதவியில் பணியாற்றுவதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இதன் காரணமாக இப்பதவியையொட்டிய பணிகளை மேற்கொள்ளவதற்காக, 11ஆம் திகதி நடைபெற்ற விசேட மத்திய செயற்குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் துஷ்மந்த மித்ரபால தற்காலிகமாக நியமிக்கப்பட்டதுடன், நிரந்தரப் பொதுச் செயலாளர் விரைவில் நியமிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சரத் ஏக்கநாயக்க கட்சியின் சிரேஷ்ட பிரதிச் செயலாளர் என்பதுடன், இதற்கு முன்னர் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அதேவேளை, கட்சியின் தேசிய அமைப்பாளராகச் செயற்படும் துமிந்த திஸாநாயக்க இதற்கு முன்னர் கட்சியின் பொதுச் செயலாளராக பணியாற்றியமையும் குறிப்பிடத்தக்கது. (ரெ-21)

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எனும் போர்வையில் மிரட்டி மில்லியன் கணக்கில் பணம் பெற்ற யுவதி கைது!

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர் போன்று போலியாக நடித்து பலரை மிரட்டி பல இலட்சம் ரூபா பணத்தை பெற்றுக் கொண்ட 24 வயது யுவதியொருவரை மொரட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சட்டத்தரணி படிப்பிற்கு தேவையான பணத்திற்காகவே இவ்வாறு பல்வேறு நபர்களிடம் பணம் பறித்ததாக சந்தேக நபர் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்துள்ளார். அதுமட்டுமன்றி, இந்த யுவதி தனது தந்தை பொலிஸ் திணைக்களத்தில் மூன்றாம் நிலை பிரதி பொலிஸ் மா அதிபர் எனக் கூறியும் பலரை மிரட்டி பணம் பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, யுவதியொருவர் போலியான பெயரில் தம்மிடம் 5 லட்சம் ரூபாவை மோசடியாகப் பெற்றுக்கொண்டதாக கடந்த 9 ஆம் திகதியன்று மொரட்டுவ பொலிஸில் இரண்டு நபர்கள் முறைப்பாடு செய்திருந்தனர். அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டதில் இந்த யுவதி பொரளை பிரதேசத்தை சேர்ந்தவர் என்பதை தாம் கண்டறிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதனையடுத்து அவரைக் கைது செய்து விசாரணை நடத்தியபோது, தான் ஒரு மூத்த பொலிஸ் அதிகாரியாக போலியாக நடித்து பல்வேறு நபர்களை பயமுறுத்தி பணம் பெற்றதாக அவர் வாக்குமூலம் அளித்தார். சட்டத்தரணிப் படிப்பிற்குத் தேவையான பணத்திற்காகவே இவ்வாறு நபர்களிடம் பணம் பறித்ததாக சந்தேக நபர் தனது வாக்குமூலத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அவர் மூத்த பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் அடையாள அட்டையைப் பயன்படுத்தியுள்ளமையும் தெரியவந்தது.

மேற்படி சந்தேக நபர், கல்கிசையில் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனமொன்றில் பணியாற்றியவாறே இவ்வாறு இந்த மோசடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் இரண்டு பேர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் இருப்பதாகக் கூறி, அவர்களையும் பயமுறுத்தி பணம் கேட்டுள்ளார். பொலிஸ் கடிதத் தலைப்புடனான கடிதம் மூலம் அவர்களுக்கு இந்த யுவதி தொடர்ந்து அச்சுறுத்தல் கடிதங்களை அனுப்பியுள்ளார். யுவதியின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சிய இரண்டு சுகாதாரப் பரிசோதகர்களும் அவர் கேட்ட பணத்தை அவர் வழங்கிய வங்கிக் கணக்கில் வைப்பிட்டுள்ளனர்.

அதற்கமைய, பண மோசடி செய்ததாக குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட குறித்த யுவதியை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



கல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மங்கள தெஹிதெனிய, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரிந்து அனுராத ஆகியோரின் அறிவுறுத்தல்களுக்கமைய மொரட்டுவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நிஹால் பிரான்சிஸ் தலைமையில் விசாரணைகள் நடத்தப்பட்டன. (ரெ-22)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.09.2023இல் வெளியிடப்பெற்றது.